சார்பு நீதிமன்றம், திருவாரூர்.

முன்னிலை திரு. M. முருகன், M.L.,

சார்பு நீதிபதி, திருவாரூர்.

<u>அசல் வழக்கு எண்.05/2023</u>

13.11.2025

வா.சா.1 திருமதி. சந்திரா, க/பெ. நாடிமுத்து

**<u>பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

எனக்கு வயது 75 என்றால் சரிதான். எனது கணவரின் வயது மற்றும் வருமானத்தை காட்டக்கூடிய ஆவணங்கள் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். எனது கணவர் விவசாய கூலி வேலை செய்துவந்தார் என்றால் சரிதான். எனக்கும் என் கணவருக்கும் திருமணத்தின் போது 11 வயது வித்தியாசம் இருந்தது. நான் சொல்லியுள்ள காலக்கட்டத்தில் என் கணவரால் விவசாய வேலைக்கு செல்ல இயலாது என்றால் சரியல்ல. வழக்கிற்காக எனது கணவர் இறக்கும் தருவாயில் விவசாய வேலை செய்து மாதம் ரூ.15,000/- பெற்றுவந்ததாக பொய்சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் சொல்லியுள்ளவாறு மின்சார கம்பி அறுந்து என் கணவர் மீது விழவில்லை என்றாலும் வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றாலும் சரியல்ல. எனது கணவருக்கு யார் யார் வாரிசு என்பதை காட்ட ஆவணம் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. வழக்கிற்காக எனது கணவரின் வருமானத்தை கொண்டுதான் குடும்பம் நடத்தப்பட்டு வந்ததாக மிகைப்படுத்தி சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. 2 முதல் 4 வாதிகள் திருமணம் முடிந்து அவர் அவர் கணவருடன் வாழ்ந்து வருகிறார்கள் என்றால் சரிதான். 5, 6 வாதிகள் தனித்தனியாக வசித்து வருகிறார்கள் என்றால் சரிதான். எனது கணவரின் வருமானத்தை நம்பிதான் நாங்கள் குடும்பம் நடத்தினோம் என்று வழக்கிற்காக பொய்யாக சொல்லியுள்ளேன் என்றால் சரியல்ல. தாவாவில் கேட்டுள்ள நஷ்ட ஈட்டு தொகை அதிகம் என்றாலும் நஷ்ட ஈடு தொகையை கொடுக்க பிரதிவாதிகள் கடமைப்பட்டவர்கள் இல்லை என்றாலும் சரியல்ல. பிரதிவாதிகள் மின்கம்பங்களை பராமரிக்காமல் இருந்ததாக வழக்கிற்காக பொய்சொல்கிறேன் என்றால் சரியல்ல.

Typed down to my dictation, In my presence and hearing and under my personnel direction and Superintendence and admitted by the witness to be Correct.

Sd/ M. Murugan
Subordinate Judge,
Tiruvarur.